திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்த அறிக்கையிலுள்ள முக்கியமான அம்சங்களையாவது தொகுத்து இந்தச் சட்ட சபைக்குத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : உறுப்பினர் அவர்களின் யோசனையை அரசாங்கம் பரிசீலனை செய்து ஆவன செய்யும்.

ஈ.எஸ்.ஐ. மருந்தகங்கள்

* 308 **வினு—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் அரசு E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : ஒவ்வொரு தொழிற்சாலையிலும் E.S.I. மருந்தகங்களை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : ஈ.எஸ்.ஐ. மருத்துவமனைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடையே நீண்டதூரம் பலவிடங்களில் இருக்கிறது. அந்த வசதிகளை தொழிற்சாலைகளில் இருக்கக்கூடிய தொழிலாளர்கள் பெறுவதற்கு இயலவில்லை. ஆகவே அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையில் அதிக தூரத்திலுள்ள தொழிற்சாலைகளிலாவது, சிறிய அளவில் மருந்தகங்களை அமைப்பதுபற்றி அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போதே ஈ.எஸ்.ஐ.-க்கு மத்திய அரசு தரும் உதவியோடு, நமது மாநில அரசு ஒன்றரைக் கோடி ரூபாய் அதிகமாகச் செலவழித்து வருகிறது. ஆகவே இன்னும் அதிகமாகத் தரவேண்டுமென்று மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. நிதி வசதி கிடைத்தவுடன் உறுப்பினர் அவர்களின் யோசனை நடைமுறைக்கு வர பரிசீலனை செய்யப்படும்.

* 309 **வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

கோவை, சிங்காநல்லூரில் கட்டப்பட்டுள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதித் திட்ட மருத்துவ மனையில், படுக்கை எண்ணிக்கையை தொடக்கத்தில் திட்டமிட்டிருந்தபடி 500 ஆக உயர்த்திட செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தற்போது ஏதுமில்லை.